# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி
## அசல் வழக்கு எண். 210/2015

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | அருள்குமார் | மதம் | .. | இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. | நடராஜன் | தொழில் | .. | விவசாயம் |
| வயது | .. | 51 | ஜாதி | .. | கொங்குவேளாளர் |
| கிராமம் | .. | கரியானூர் | நாள் | .. | 14.12.2021 |
| வட்டம் | .. | சங்ககிரி | | | |

1872 ஆம் வருடத்திய சட்டம் 1 ல் குறிப்பிட்ட விதிமுறையின்படி வாதி/ பிரதிவாதி தரப்பு சாட்சியான திரு. அருள்குமார் என்பவரிடமிருந்து இந்நீதிமன்றத்தில் உதவியாளர் கிரேடு 3 ஆக பணிபுரியும் திருமதி. கோகிலா என்பவரால் சத்தியப் பிரமாணம் பெறப்பட்டது.

வா.சா.1 – அருள்குமார் - முதல் விசாரணையின் தொடர்ச்சி.

6. 03.09.2010 தேதியிட்ட 1 ஆம் வாதியின் பெயரில் உள்ள கிரையப்பத்திரம், ஆவண எண்.2367/2010, இணையவழி சான்றளிக்கப்பட்ட நகல், வா.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7. 19.11.2010 தேதியிட்ட 1 ஆம் வாதியின் பெயரில் உள்ள கிரையப்பத்திரம், ஆவண எண்.4218/2010, இணையவழி சான்றளிக்கப்பட்ட நகல், வா.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8. 28.09.2011 தேதியிட்ட அ பதிவேடு, உண்மை நகல், வா.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. 28.09.2021 தேதியிட்ட கோனேரிப்பட்டி அக்ரஹாரம் கிராம நிர்வாக அலுவலர் அவர்கள் வழங்கிய புல வரைபடம், உண்மை நகல், வா.சா.ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. 07.09.2015, 05.07.2019, 30.08.2019, 04.11.2019 தேதியிட்ட முதலாம் வாதி பெயரிலான மின்கட்டண இரசீதுகள் (4 எண்ணிக்கை), அசல், வா.சா.ஆ. 10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11. 02.09.2016 தேதியிட்ட நடராஜன் என்பவரின் இறப்புச் சான்றிதழ், அசல், வா.சா.ஆ. 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்கண்ட ஆவணங்கள் வழக்கு தொடர்ந்த பின்பு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கூறி, பிரதிவாதி தரப்பில் மேற்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்ய ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. ஆட்சேபனை குறித்து வழக்கின் இறுதி தீர்ப்பில் முடிவு செய்யப்படும்.

12. நீதிமன்ற ஆணையர் அறிக்கை, நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆணையர் தாக்கல் செய்த வரைடம் நீ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க வா.சா.1 இன் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம் / அருள்குமார்

ஒப்பம் / திரு. ஆர். ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.